**20.03.2024**
***OS 457/2019***
**பி.வா.சா.1 மூவேந்திரன்**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

தர்மலிங்கம் 04.07.1996ம் தேதி எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் 1480 + 360 = 1840 என்றால் சரிதான். சர்வே எண்.269/1ன் என் பெயருக்கு எவ்வித கிரைய பத்திரமும் இல்லை என்றால் சரிதான். நான் எனது மனைவி ரேணுகாதேவிக்கு பதிந்து கொடுத்த சர்வே எண்.269/1ற்கான கிரைய பத்திரத்தை மாவட்ட பதிவாளர் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான் (வா.சா.ஆ.8). எனது மனைவி ரேணுகாதேவி 08.12.2016ல் ஆவண எண்.2043/2016 கிரைய பத்திரத்தையும் முறைகேடான பத்திரம் என்று மாவட்ட பதிவாளர் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். 24.12.2008ல் நான் எனது மகன் அன்புராஜிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.2222/2008யும் முறைகேடான பத்திரம் என்று மாவட்ட பதிவாளர் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். என் மீது தாக்கல் செய்துள்ள குற்ற வழக்கிற்கு தடைஉத்தரவு பெற்றதாக சொல்லியுள்ளேன். அந்த தடை உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது என்னிடம் உள்ளது. **”(நீதிமன்ற கேள்வி:- மேற்படி மாவட்ட பதிவாளர் வழங்கிய உத்தரவின் பேரில் நான் எவ்வித சட்டநடவடிக்கையும் எடுத்துள்ளேனா என்றால் நீதிபேராணை மனு தாக்கல் செய்துள்ளேன்)”.** 11.03.2002ம் தேதிய கிரைய பத்திரப்படி 1480 + 360 = 1840 சதுரடி மட்டுமே உள்ள நிலையில் கூடுதலாக 32 சதுரஅடியும் சேர்த்து 1872 சதுரடி கிரைய பத்திரம் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. கிரையம் செய்து கொடுத்துள்ளேன். அவ்வாறு நான் சுந்தரிக்கு எவ்வித கிரையமும் கொடுக்கவில்லை என்று நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி பெருமாள், ஆறுமுகத்திடமிருந்து தானசெட்டில்மெண்ட் வாங்கிய விவரம் எனக்குத் தெரியாது. இந்த விவரம் மாவட்ட பதிவாளரிடம் வழக்கு நடக்கும்போதுதான் தெரியும். நான் மாவட்ட பதிவாளரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளென் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் வாதி ஆஜராகியிருந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் தனது உத்தரவில் ஆவண எணகள்.2222/2008, 798/2020, 2043/2016 ஆவணங்களானது ஏற்கனவே கிரையம் செய்துள்ள நிலையில் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால் ரத்து செய்கிறேன் என மாவட்ட பதிவாளர் தனது உத்தரவில் சொல்லியுள்ளார் என்றால்

சரிதான். அது தவறு. மேற்படி மாவட்ட பதிவாளர் உத்தரவின் அடிப்படையில் மேல்முறையீடு செய்ததாக சொல்லும் உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை எனறால் சரிதான். நான் சொல்வதுபோல எந்த மேல்முறையீட்டிற்கும் செல்லவில்லை என்றும், அதனால்தான் அந்த மேல்முறையீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் உள்ளது. அதனால் இந்த சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியது 1840 சதுரடிதான் என்றும், அதை நான் சுந்தரிக்கு எழுதி கொடுத்துவிட்டேன் என்றும் சொன்னால் அது தனி இடம். நான் என்னுடைய எதிருரையில் முதலில் கூரை வீடு இருந்ததாகவும், பின்னிட்டுதான் சென்டிரிங் வீடு இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதலில் கூரை வீடு இருந்து பின்னிட்டு சென்டிரிங் வீடு கட்டியுள்ள விவரத்தை மாவட்ட பதிவாளர் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் 17.12.1986 கிரைய பத்திரப்படி மொத்தம் 1480 சதுரடி என்றுதான் சொல்லியுள்ளேன். 03.07.1987 கிரைய பத்திரத்தில் தர்மலிங்கம், முத்துராமலிங்கத்திடம் வாங்கிய சொத்தின் விஸ்தீரணம் 360 சதுரடி என்றால் சரிதான். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் 04.07.1996 கிரைய பத்திரப்படி 1872 சதுரடி என்று சொல்லியுள்ளேன். ஆக மொத்தம் 1840 சதுரடி. வா.சா.ஆ.1ன் படி 04.07.1996ல் ஆவண எண்.715/1996 தர்மலிங்கம் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரப்படி 1480 + 360 = 1840. எனவே இதன்படி நான் நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் 1872 சதுரடி போக பெருமாளுக்கு பாத்தியப்பட்டது போக மீதமுள்ள சொத்தை என் வசம் கொடுத்துவிடுங்கள் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள சொத்து என்னிடம் உள்ளது என்று காண்பிக்க கூடிய ஆவணம் எதையும் நான் மாவட்ட பதிவாளரிடம் காண்பிக்கவில்லை எனறால் சரியல்ல. உண்மையிலேயே என்னிடம் அவ்வாறு ஆவணங்கள் இருந்திருந்தால் விசாரணையில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு இல்லாததால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 11.03.2002ல் ஆவண எண்.246/2002 கிரைய பத்திரத்தில் நானும், தர்மலிங்கமும், சுந்தரிக்கு கிரையம் கொடுக்கும்போது 1872 சதுரடி என்று சொல்லிதான் கிரையம் கொடுத்துள்ளேன். 1480 சதுரடிக்கு கிரைய பத்திரத்தில் ஒரு நான்குமால் உள்ளது என்றால் சரிதான். அதே கிரைய பத்திரத்தில் 360 சதுரடிக்கு தனியாக ஒரு நான்குமால் உள்ளது என்றால் சரிதான். ஆக இரண்டையும் சேர்த்து கூடுதலாக 32

சதுரடி சேர்த்து வேறு நான்குமால் போட்டு கிரைய பத்திரம் பதிவு செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. 1480 சதுரடிக்கும் 360 சதுரடிக்கும் சேர்த்து கிரையம் செய்யும்போது புதிதாக ஒரு நான்குமால் கிடைக்கும் என்றால் சரிதான். 1872 சதுரடி நிலத்தை போக மீதி இடம் உள்ளது என்று நான் எதிரிருமை கோரிக்கை எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். என்னிடம் எவ்வித ஆவணமும் இல்லாததால்தான். எதிரிருமை கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்